## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU

MCOP No. 40/2025

நாள் – 20.08.2026

PW 1 – ஹரிஷ் கதிர்வேல்

(சாட்சி மீண்டும் மனுவின் பேரில் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)

முதல் விசாரணைத் தொடர்ச்சி –

மருத்துவ கட்டண ரசீதுகள் மொத்தம் 26 **ம.த.சா.ஆ.10 வரிசை.** ஊடுகதிர் படங்கள் மொத்தம் 5 **ம.த.சா.ஆ.11 வரிசை.** SRM மருத்துவமனையில் எடுக்கப்பட்ட Scan படங்கள் 3 **ம.த.சா.ஆ.12 வரிசை.** SRM மருத்துவமனையில் மருந்து சீட்டுகள் **ம.த.சா.ஆ.13.** ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.ஆ.1.** மனுபடி உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை –

இந்த விபத்தில் காயமடைந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளது நான் தான். ID interiors and Design studio Pvt. ltd., என்ற நிறுவனத்தில் நான் Chief Electrician ஆக வேலை பார்த்து வருகிறேன். அது ஒரு தனியார் நிறுவனம் ஆகும். என்னுடன் 3 பேர் அந்த நிறுவனத்தில் வேலை செய்து வருகிறோம். மாதம் ரூ.40,000/– வருமானம் பெறுகிறேன் என்பதை காண்பிக்கும் ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4.9.2024 ம் தேதி மாலை 4.30 மணியளவில் மகேந்திரா சிட்டியில் வேலை செய்துவிட்டு ஊரப்பாக்கத்தில் உள்ள எங்களது கிளை அலுவலகத்திற்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்ற போது சிங்கபெருமாள்கோவில் ரெயில்வே கேட் அருகில் பின்னால் வந்த லாரி மோதி விபத்து நடந்தது. விபத்தில் எனக்கு தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டது. இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. SRM மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றேன். விபத்து குறித்து தாம்பரம் போக்குவரத்து போலிசார் SRM மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்த போது வந்து விசாரித்தார்கள். எந்த காவல் அதிகாரி விசாரித்தார் என்று சரியாக தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் எனக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதற்கான BNS சட்டப்பிரிவு 125(b)ன் கீழ் வழக்கு

K. Kiran
20/8/26

பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் போலிசார் லாரி ஓட்டுநர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்களா என்பது குறித்தும், என்ன பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்பது குறித்தும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். ஒரு வாரம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். விபத்தினால் அதிக நேரம் என்னால் நிற்கமுடியவில்லை என்றும், நடக்கமுடியவில்லை என்றும் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு பூரணமாக குணமாகிவிட்டது என்றும், அதனால் எனக்கு நிரந்தர வருவாய் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் தான் என்று சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.10 மருத்துவ கட்டண ரசீதுகள் 26 வழக்கில் இழப்பீடு தொகையினை அதிகப்படியாக பெறுவதற்காக என்னால் தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரும் இழப்பீடு தொகை அதிகப்படியானவை என்று சொன்னால் சரியல்ல. லாரி ஓட்டுநர் மீது போடப்பட்ட வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு உரிய அனுமதி இல்லை என்றும், 30.05.2024 லேயே அனுமதி முடிந்துவிட்டது என்றும் சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அனுமதி முடிந்து 3 மாதங்கள் பிறகு விபத்து ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

M. [signature]
20/8/26.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 20.08.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

[signature] 20/8/26

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.